விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 16 புதன்கிழமை (28.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 71

## மகிந்தவை ஜனாதிபதியாக்குவதற்கு மேற்கொண்ட முயற்சி தவறானது

### வருந்துகிறார் மங்கள சமரவீர

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷவை தெரிவு செய்வதற்கு தான் மேற்கொண்ட முயற்சி தவறானது என்பதை தற்போது உணர்ந்து கொண்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். தவறான ஒருவரை நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பதவிக்கு தெரிவு செய்யுமாறு மக்களை கோரியது (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இந்துக்கல்லூரி படையினரால் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரிக்கு அண்மையில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தினையடுத்து நேற்றுக் அதிகாலை கல்லூரியையும் அதனை அண்டிய பகுதிகளும் படையினரால் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

தேடுதலில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு கே.கே.எஸ்.வீதி மற்றும் கஸ்தூரியார் வீதி என்பன போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டதுடன்;ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் கல்லூரி மைதானத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

பல மணி (04 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் எறிகணைத்தாக்குதல்

# அமெ.,இத்தாலிய தூதுவர்கள் காயம்

## இரண்டு ஹெலி கொப்டர்கள் மயிரிழையில் தப்பின

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள விமானப்படையினரின் விமான ஓடுபாதையை நோக்கி நேற்றுக் காலை 8.40 மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய எறிகணைத்தாக்குதலில் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் றிச்சட் ஓ பிளக், இத்தாலியத் தூதுவர் பியோ மரியானி ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்களுடன் மூன்று விசேட அதிரடிப்படையினர், நான்கு பொலிஸார், இரண்டு விமானப்படையினரும் மாணவி ஒருவரும் காயமடைந்தனர். (04 ஆம் பக்கம் பார்க்க)



## இராஜதந்திரிகள் மீதான எறிகணை வீச்சு அரசு மீது விடுதலைப்புலிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

மட்டக்களப்பில் உள்ள 23-3 ஆவது பிரிகேட் தளத்தின் வெபர் விளையாட்டு மைதானத்தில் உலங்குவானூர்தியில் இருந்து இறங்க முற்பட்ட வேளை இடம்பெற்ற எறிகணை வீச்சுத் தாக்குதலில் காயமடைந்த வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு எமது ஆழ்ந்த கவலைகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேவேளை அரசாங்கம் வெளிநாட்டு இராஜதந்திரிகளை இராணுவ வலயத்துக்குள் உள்ள ஆட்லறி ஏவுதளத்திற்குள் இராஜதந்திர வழிமுறைகளை பின்பற்றாது அழைத்து வந்தது அவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் செயல். இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்று விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தாக்குதலுக்கு உள்ளான பகுதியில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்ளதாக கிளிநொச்சியில் உள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு விவகாரங்களுக்கான இணைப்பாளர் மார்ட்டின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-மகிந்த உடன்படிக்கை ஐ.தே.கட்சி ஆராயும்

ஜனாதிபதித் தேர்தலின்போது விடுதலைப் புலிகளும் மகிந்த ராஜபக்ஷவும் மேற்கொண்டதாகக் கூறப்படும் உடன்படிக்கை குறித்து மேலும் ஆராயவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்றுள்ள நிகழ்வொன்றில் உரையாற்றியுள்ள அவர் உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதியும் அவரது சகோதரரும் கருத்து வெளியிடாமையானது ஐக்கிய தேசியக்கட்சியை இந்த நிலைப்பாட்டிற்கு வழிவகுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நடத்தும் போருக்கு சீனா ஆதரவளிக்குமாம்

(கொழும்பு)

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இலங்கைக்கு பூரண ஆதரவு வழங்குமென உறுதிவழங்கியுள்ள சீனா, இலங்கையின் இறைமை தொடர்ந்தும் பேணப்படுமெனவும் தெரிவித்துள்ளது.

ஏழு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சீனாவுக்கு சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை, தேசிய நல்லிணக்கம் என்பவற்றுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக சீனா உறுதியளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில் ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்தது என (04 ஆம் பக்கம் பார்க்க)

## தூதுவர்களை இலக்குவைத்தே புலிகள் தாக்குதல் நடத்தினர்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் தூதுவர்களை இலக்குவைத்தே இத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் இதில் எந்தவித சந்தேகமும் இல்லை எனவும் இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதலுக்கு 120 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டுத் தூதுவர்கள் மட்டக்களப்புக்கு வருவதாக கிடைத்த தகவலையடுத்தே விடுதலைப்புலிகள் இத் தாக்குதலினை மேற்கொண்டதாகவும் கூறிய அவர்; தாக்குதல் நடத்தியதனை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ந-3)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**



யாழ்.இந்துக் கல்லூரியில் நேற்று படையினர் நடத்திய தேடுதலின் போது மாணவர்கள் மைதானத்தில் நிற்பதைப் படத்தில் காணலாம்.
(படம்:- திலீவின்பன்)

# அந்தணர் அல்லாத இந்து குருமாருக்குப் பயிற்சி

இந்து ஆலயங்களில் பணிபுரியும் அந் தணர் அல்லாத இந்துக் குருமாருக்கான பயிற்சி நெறிகளை மார்ச் மாதத்தில் நடத்து வதற்கான ஏற்பாடுகளை இந்துசமய கலா சார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண் டுள்ளது.

இப் பயிற்சி நெறியைத் தொடர விரும் பும் குருமாரிடமிருந்து இதற்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கடமையாற்றும் ஆலயத்தின்பெயர், முகவரி, கிராம சேவையாளர் பிரிவு, உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மாவட்டம், கல்வித் தகைமை, இதற்குமுன் பெற்ற இது போன்ற பயிற்சிகளின் விபரப் ஆகியவற்றை வரி சைக் கிரமமாகக் குறிப்பிட்டு ஆலயத்தலை வர், செயலாளரின் உறுதிப்படுத்தலோடு பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களம், இல.248 1/1, காலி வீதி, கொழும்பு-4 என்ற முகவரிக்கு மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அந்தணர் அல்லாத இந்து குருமார் பயிற்சி-2007 எனக் குறிப்பிட வேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

இப் பயிற்சி நெறியில் ஆலய பூஜை முறைகள், கிரியை விபரங்கள், ஆசார அனு ட்டானங்கள், சமய தத்துவங்கள் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்குமென பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு தெரிவித் துள்ளார். (ந-5)

# வெளிநாட்டுத் தூதுவர்கள் மீதான தாக்குதல் விடுதலைப்புலிகள் மீது அரசாங்கம் கண்டனம்

(கொழும்பு)

வெளிநாட்டுத் தூதுவர்கள் மீது விடுத லைப்புலிகள் நடத்திய தாக்குதலை வன்மை யாகக் கண்டிப்பதாக அரசாங்கம் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

பயங்கரவாத நடவடிக்கைகளைத் துடைத் தெறிவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான அரசாங்கத் தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கு மாறும் ஜனநாயகத்தின்பால் திரும்புவதற்கு விடுதலைப்புலிகளை வற்புறுத்துமாறும் சர் வதேச நாடுகளிடம் அரசாங்கம் கேட்டுக் கொள்கின்றது.

மட்டக்களப்பில் மனிதாபிமான நடவடிக் கைகளை மேற்கொள்வதற்காகச் சென்ற வெளிநாட்டுத் தூதுவர் குழுவினரை இலக்கு வைத்தே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் மூலம் புலிகள் மீண்டும் தமது தோற்றத்தை உலகத்துக்குக் காண் பித்துள்ளனர். அமெரிக்கா, இத்தாலி மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளின் தூதுவர் குழுவி னர் மட்டக்களப்பு விமான இறங்கு தளத்தில் தரை இறங்கியபோது இத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இத்தாலியத் தூதுவர் மற்றும் ஏழு பாதுகாப்பு அதிகாரிகள் இத் தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள இடம்பெயர்ந் தவர்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்வதற்காகவே இக் குழுவினர் அங்குசென்றிருந்தனர்.

இக் குழுவுக்கு இடர் முகாமைத்துவம் மற் றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமை வகித்தார். தாக்குதல் நடத்தப்பட்ட பிரதேசங்களிலிருந்து புலிகள் இப்போது விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

புனரமைப்புப் பணிகள் தற்போது நடை பெற்று வருகின்றன. விடுதலைப்புலிகள் வெளி நாடுகளில் நிதிசேகரிப்பது மற்றும் ஆயுதங் கள் கடத்துவது தொடர்பான நடவடிக்கை ளுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் என்பதையும் இத் தாக்குதல் சம்பவம் உணர்த்துவதாகவும் அந்த அறிக் கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

# அரசில் இணைந்த ஐ.தே.க.உறுப்பினர் இருவர் மீண்டும் ஐ.தே.கட்சிக்கு திரும்ப விருப்பம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து அரசாங் கத்தில் இணைந்து கொண்ட இரண்டு நாடா ளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அந்தக் கட்சி தெரிவித் துள்ளது.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினராகவிருந்து தற்போது மகிந்த ராஜபக்ஷ வின் அரசில் அமைச்சரவை அந்தஸ்துள்ள சுற்றுலாத்துறை அமைச்சராகப் பதவி வகிக் கும் மிலிந்த மொறகொடவும் கம்பஹா மாவ ட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருமே மீண்டும் ஐக்கிய தேசிய கட்சிக்குத் திரும்ப வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையிலுள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்களால் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் புறக்கணிப்படுவதாகவும், இவர்கள் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் வெளிப்படையாகத் தெரிவித்துவரும் விமர்சனங்களாலும் ஐக் கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்தில் இணைந்து கொண்டவர்கள் விசனம் அடைந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுடன் இரு வரும் பேச்சு நடத்தியுள்ளதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் கூட்டத்தில் இவர்களுடைய வேண்டுகோள்கள் பரிசீலிக் கப்பட்டு முடிவு அறிவிக்கப்படவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள் ளன. (ந-5)

# மாணவர்களின் பயணப் பதிவு இன்று இடம் பெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலிருந்து தென்பகுதிப் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லவிருக் கும் மாணவர்களுக்கான பதிவுகள் இன்று காலை 9 மணிமுதல் மாவட்டச் செயலகத் தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே தெரிவு செய்யப்பட்ட மாணவர் கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கு மாறு யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அனைத்து மாணவர்களுடனும் செல்லக் கூடியவாறு மூன்று பெற்றோர்கள் செல்வதற் குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள் ளது என்பதனையும் அரச அதிபர் அறியத் தந்துள்ளார். (ந)

# மறு அறிவித்தல்வரை பதிவுகள் இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

கப்பல் பயண ஒழுங்குகள் தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் பெயர் பதிந்தவர்க ளுக்கான பயண ஒழுங்குகள் மேற்கொள் ளப்படுவதனால் மறு அறிவித்தல் வரை புதிய பயணப் பதிவுகள் எவையும் மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்படமாட்டாது என அரச அதிபர் அறிவித்துள்ளார். (ந)

# தபால் பொதிகள் இன்று அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு மற்றும் வெளிமாவட்டங்க ளுக்கான 12 தபால் பொதிகள் இன்று காலை 9 மணிக்கு தெல்லிப்பழையில் வைத்து சம் பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்பட வுள்ளதாக யாழ்.பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று மதியம் 12 மணிவரை சேகரிக்கப் பட்ட தபால்களே அனுப்பி வைக்கப்படவுள் ளது. நேற்றையதினம் கப்பல் மூலம்திரு கோணமலையிலிருந்து எடுத்து வரப்பட்ட குடாநாட்டுக்கான 250 கிலோ எடைகொண்ட 22 தபால் பொதிகள் இன்று அனைத்துப் பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ந-3)

# மகரகமவில் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் கல்வியியல் தர விருத்தியை ஏற்படுத்தல், ஆசிரிய நிலையங்களின் வேலைத்திட்டங்களை வலுவூட்டல் தொடர் பான திட்டமிடல் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து வல யங்களைச் சேர்ந்த கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்க ளும், ஆசிரிய நிலைய முகாமையாளர்க ளும் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ்.வல யக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத் தினம் தெரிவித்தார். (ந-3)

# இலங்கைக் கடற்படையின் தாக்குதலை கட்டுப்படுத்துங்கள்

## பிரதமருக்கு கருணாநிதி கடிதம்

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர் கள் மீது நடத்தும் தாக்குதலை உட னடியாகத் தடுத்து நிறுத்துமாறு தமிழக முத ல்வர் மு. கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பி கடிதத்தில் கேட்டுள்ளார். அவர் எழு திய கடிதத்தில்,

கடந்த பத்து நாட்களில் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளைத் தமிழக அரசு வேதனையோடு தங்களுக்குத் தெரியப்ப டுத்திக் கொள்கின்றது.

தமிழக மீனவர்கள் இந்தியக் கடற்பரப்பில் மீன் பிடித்தொழிலை மேற்கொண்டிருந்த போது இலங்கைக் கடற்படையினர் அவர் கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண் டனர்.

இதனால் மீனவர் ஒருவர் உயிரி ழந்தும் மற்றொருவர் படுகாய மடை ந்தும் உள்ளார். எனவே இது விடயத்தில் தாங்கள் தலையிட்டு இலங்கைக் கடற்படையைக் கட்டுப்படுத்து மாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# மாவட்ட மட்டப் போட்டிகள் விரைவில் நடைபெறும்

2007 ஆம் ஆண்டுக்கான மாவட்ட மட்ட போட்டிகளை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

தமிழ், ஆங்கிலம், விளையாட்டு மற்றும் சிறுவர் நாடகம் ஆகிய போட்டிகளே மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ளதாகவும் இப் போட்டிகளை நடத்துவது தொடர்பாக யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய வலயக் கல்விப் பணிப்பாளருடனும் கலந்துரையாடவுள்ள தாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டு நடத்தப்படாமலிருக்கும் மாகாண மட்ட தமிழ், ஆங்கில தினப் போட்டி கள் விரைவில் நடாத்துவதற்கான ஒழுங்கு கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசை யா அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் கூறி னார். (ச-3)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் நீரியில் வளங் கள் அமைச்சின் கீழ் இயங்கும் கடற்றொழில் நீரியில் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் (கண்காணிப்பு நடவடிக்கை) பதவி க்கு விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வலம்புரி அலுவல கத்தில் பார்வையிடலாம். (ந-3)


## ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை

**சுவாமி விவேகானந்தர் பற்றிய கண்காட்சி**

இடம் :- நல்லூர் தெற்கு, ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
காலம் :- 28.02.2007 (இன்று) காலை 10 மணிக்கு (A.M)
அதிபர் :- திருமதி விமலாதேவி விமலநாதன் தலைமையில் சுவாமி விவேகானந்தர் பற்றிய கண்காட்சி - கருத்தரங்கு. (க.பொ.த. சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு)

பாடசாலை வாசிகசாலைக்கு நூல்கள் அன்பளிப்பு செய்யப்படும்.

சுவாமி சித்ரூபானந்தா கலந்து கொள்கின்றார்.

(c-625)



வருசப் புலம் மகாமாரி அம்பாள்
மஹோற்சவம்
ஏழாம் திருவிழா
28.02.2007 புதன்கிழமை

தாரணி உமாதேவிக்கு ஜெய மங்களம் -ஜய
தாட்ஷா யணியம்மைக்கு சுப மங்களம்
பாரினில் வரியப்புலப் பார்வதி சிவகாமிக்கும்
பத்திசெய் யன்பர்கட்கும் பார்கவிக்கும் மங்களம்

(629)

திறமையான நல்ல சுபாவங்களையுடையவர்கள் தாம் சரியான பயிற்சி பெறாதபோது மிகவும் கெடுதலானவர்களாக மாறுகின்றார்கள்.

—பிளேட்டோ

வலம்புரி

# இந்தியா வழங்கிய யுத்தக் கப்பல் எதற்கு?

இந்தியாவுக்கும், ஈழத்தமிழர்களுக்கும் இடையேயான தற்போதைய உறவு நிலையை எண்ணும் போது நெஞ்சம் கனக்கிறது.

பேரினவாத சக்திகள் எம்மைத் தாக்கினால் அதனை இந்தியா பார்த்திராது என்ற நினைப்பும், நம்பிக்கையும் இப்போது தலைகீழாகி விட்டது.

1983 ஜூலைக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை ஏற்றி இறக்குவதற்காக 'சிதம்பரம்' கப்பல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எல்லாம் இழந்து வெறும் கையோடு நின்ற தமிழ் மக்களைச் சிதம்பரம் கப்பல் ஏற்றியபோது தென்னிலங்கை மக்கள் பயந்து போயினர்.

தமிழர்களில் கை வைத்தால் இந்தியா பதிலடி கொடுக்கும் என்பதே அந்தப் பயத்திற்கான காரணமாகும்.

1983 ஜூலைக் கலவரத்தையடுத்து அனுப்பப்பட்ட 'சிதம்பரம்' கப்பலும் அதனைத் தொடர்ந்து 1987களில் இந்திய மிராஜ் விமானங்களும் இலங்கையின் எல்லைப் பரப்பிற்குள் நுழைந்தன. மிராஜ் விமானங்கள் யாழ். குடாநாட்டு மக்களுக்கு உணவுப் பொட்டலங்களைப் போட்டுச் சென்றன.

விமானத்தின் வேகம் உணவுப் பொட்டலங்களின் உருப்படிக்கு இடம் தராது என்ற உண்மை தெரிந்திருந்தும், இலங்கை அரசுக்கு எச்சரிக்கை செய்யும் முகமாகவே இந்திய விமானங்கள் இலங்கைக்குள் ஊடுருவியது என்பதும் உணவுப் பொட்டலங்களைப் போட்டுச் சென்றது என்பதும் ஊகித்தறிந்த விடயங்களே.

இவ்வாறு ஈழத் தமிழ் மக்களை காப்பாற்றுவதற்காக கப்பலையும் விமானத்தையும் அனுப்பிய இந்திய அரசு இப்போது இலங்கைக்கு யுத்தக் கப்பலை அனுப்புகின்றது.

அனுப்பப்படும் யுத்தக் கப்பல் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக அல்ல. மாறாக தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தில் இலங்கை அரசு பயன்படுத்துவதற்காக. சுருங்கக் கூறின் ஈழத் தமிழர்களை அழிப்பதற்காக என்றுஎடுத்துக் கொள்ளலாம்.

83 களிலும் 87 களிலும் தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காகக் கப்பலையும், விமானத்தையும் அனுப்பிய இந்தியா 2007 இல் தமிழ் மக்களை அழிப்பதற்காக யுத்தக் கப்பலை அனுப்புகின்றது என்னும் செய்தி ஜீரணிக்கக் கூடியதல்ல.

தமிழ் மக்களுக்கு எதிராக இந்தியா செயற்படமாட்டாது. தமிழ் மக்களுக்கு எதிரான போருக்கு இந்தியா உதவமாட்டாது என அந் நாட்டின் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோர் கூறிய செய்தி இன்னமும் எம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கையில்,

இலங்கைக்கு இந்தியா யுத்தக் கப்பலை வழங்கியுள்ளது என்றால் நிலைமை எப்படியாகும் என்பதை ஊகித்துக் கொள்வதில் அதிக சிரமம் இருக்க முடியாது.

இவற்றை எல்லாம் பார்க்கும் போது இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் ஈழத் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றன என்ற முடிவுக்கே நாம் வர வேண்டும்.

# அதிகரிக்கும் பல்கலைக்கழக மாணவர்களின் உள்ளீடுகளும் அதிகரிக்காத தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்புகளும்

(நேற்றைய தொடர்ச்சி...)

கல்வியாண்டுகள் 2005/2006, 2004/2005 களில் யாழ்.மாவட்டத்தில் காணப்பட்ட மக்கள் தொகைக்கும் கல்வியாண்டு 2006/2007இல் காணப்படும் மக்கள் தொகைக்கும் இடையில் பாரியளவு வேறுபாடு காணப்பட முடியாதென்பதால் அத்தரவுகளுடன் ஒப்பிட்டு 2006/2007 எதிர்பார்ப்புத் தீர்மானிக்கப்படுகின்றது.

எனினும் 2005/2006 கல்வியாண்டில் இரசாயனப் பாட மீள் திருத்தம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக அனுமதிகள் கணிப்புகளில் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதால் கல்வியாண்டு 2004/2005 இனை கணிப்பிற்கான தரவு ஆண்டாக கொள்ளப்பட்டுக் கணிப்பு மேற்கொண்டுள்ளோம்.

அடிப்படைக் கல்வியாண்டு 1993/1994 இல் மாவட்ட ரீதியில் ஒதுக்கப்பட்ட கோட்டா 20,அப்போது அகில இலங்கை ரீதியில் 700 பேர் மருத்துவ பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

பின்னர் கல்வியாண்டு 2004/2005 இல் மருத்து பீடத்திற்கு அகில இலங்கை ரீதியில் 900 பேர் தெரிவு செய்யப்பட்ட போது மாவட்ட கோட்டா அதிகரிக்கப்பட வேண்டிய விகிதாசாரப்படி 30 ஆக அதிகரிக்கப்பட்டது.

எனவே இம்முறை அகில இலங்கை ரீதியில் ஆயிரத்து 208 பேர் மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகினர். எனவே அதற்கமைய அதிகரிக்கப்பட வேண்டிய விகிதாசாரப்படி கீழே கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

*கணிப்பு- மருத்துவத்துறை*

| | ஆண்டு | தொகை |
|---|---|---|
| தீவளாவிய மொத்த உள்ளீர்ப்பு | 2004-2005 | 905 |
| | 2006-2007 | 1208 |
| தீவளாவிய திறமை அடிப்படைத் தெரிவு(40%) | 2004-2005 | 362 |
| | 2006-2007 | 483 |

தேசிய தர வரிசையில் முன்னிலையில் உள்ள 483 மாணவர்களை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ந.அரவிந்தன் 474 ஆம் தேசிய தரத்தையும் 24 மாவட்ட நிலையையும் பெற்று இறுதி மாணவனாகவுள்ளார். இதன்படி யாழ்.மாவட்டத்திற்கு தீவளாவிய திறமை அடிப்படையில் கிடைக்க வேண்டிய அனுமதிகள் 24 ஆகும்.

யாழ்.மாவட்டம் தற்போதைய போர்ச் சூழலின் காரணமாகத் தொடர்ந்தும் பின்தங்கிய மாவட்ட ஆகவுள்ளதால் மாவட்ட ரீதியிலான திறமையடிப்படையில் கணிப்புக்களில் 55 வீத கோட்டா அடிப்படை ஐந்து வீதம் பின்தங்கிய மாவட்டங்களுக்கான ஒதுக்கீடு அடிப்படை என்பன ஒன்று சேர்க்கப்பட வேண்டும். இந்த வகையில்,

2004/2005 இல்

மொத்த உள்ளீர்ப்பு 905

மாவட்ட திறமை அடிப்படையிலான யாழ்.மாவட்ட உள்ளீர்ப்பு 29

இம்முறை 2006/2007 இல் மொத்தஉள்ளீர்ப்பு ஆயிரத்து 208 ஆக அதிகரித்துள்ளதால் எதிர்பார்க்கப்படும் மாவட்டத் திறமை அடிப்படையிலான யாழ்.மாவட்ட உள்ளீர்ப்பு-(29/905) X 1208 = 39.

**மேலதிக எதிர்பார்ப்பு(X)**

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் மருத்துவ பீடம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அம்மாவட்டம் தமிழர்கள் அதிகளவில் வாழும் மாவட்டம் என்பது கருத்தில் கொள்ளப்பட்டுத் தமிழ்ப் பிரதேச உள்ளீர்ப்புகளில் மேலதிக அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதுவே மேலதிக எதிர்பார்ப்பிற்குக் காரணமாக அமைந்தது.

**இப்பிரச்சினையில் வழமையாக முன்வைக்கப்படும் விளக்கங்களும் அவற்றின் பொருத்தமற்ற தன்மையும்**

01. யாழ்.மாவட்டத்தில் மக்கள் தொகை குறைவடைந்துள்ளது.

a. இங்கு காட்டப்பட்டுள்ள கணிப்புக்கள் அனைத்தும் கல்வியாண்டு 2006/2007 இற்கு கிட்டிய ஆண்டுகளை (கல்வியாண்டு 2004/2005) அடிப்படையாகக் கொண்டவை. எனவே சனத்தொகை வேறுபாடு புறக்கணிக்கத்தக்கது.

b. கல்வியாண்டு 2004/2005 இல் இதேபோன்ற ஓர் பிரச்சினை எதிர்கொள்ளப்பட்ட போது அப்போதைய பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பின் போது சனத்தொகைக்கணிப்பீடு யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படாமையாலும் போரின் காரணமாக சனத்தொகையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாலும் இனப்பிரச்சினைக்கு நிரந்த தீர்வு காணப்படும் வரை பல்கலைக்கழக அனுமதியில் சனத்தொகை மாற்றம் தொடர்பான மாற்றங்கள் யாழ்.மாவட்டத்திற்குப் பிரயோகிக்கப்படாதென உறுதியளிக்கப்பட்டது.

c. யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் உள்ளகரீதியில் இடம்பெயர்ந்தவர்களே. எனவே யாழ்.மாவட்டத்தில் சனத்தொகை குறைவு கணிப்பிடல் மேற்கொள்ளப்படும் போது உள்ளக ரீதியாகப் போரினால் இடம்பெயர்ந்து ஏனைய தமிழ் மாவட்டங்களில் வாழ்வோர் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளனரா?

02. அனுமதிக் கொள்கையில் 40 வீதம், 55 வீதம், 5 வீதம் என்பவை தெளிவாக வரையறுக்கப்படவில்லை. உதாரணமாக 40 வீதம் வரை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

தீவளாவிய திறமை அடிப்படையிலான தெரிவு வீதம் 40 இலும் குறைக்கப்பட்டால் ஏனைய வீதங்கள் (மாவட்டக் கோட்டா, பின்தங்கிய மாவட்ட ஒதுக்கீடு என்பன) அதிகரிக்கும் என்பது தெளிவு. எனவே இவ்வாறான மாற்றங்கள் காரணமாக ஓரிரு இலக்கங்களால் தெரிவு செய்யப்பட வேண்டிய மாணவர் தொகை மாற முடியுமேயன்றி பெருமளவு தொகையினால் மாற முடியாது.

*(வளரும்)*

# சிறுவர்களைப் படையில் சேர்ப்பதில் புலிகளை மட்டும் குற்றஞ்சாட்ட முடியாது

## யுனிசெவ் பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறார்களைப் படைகளில் சேர்ப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளை மட்டும் குற்றஞ்சாட்ட முடியாது என்றும் இலங்கை இராணுவத்தினரும் துணை இராணுவக் குழுவான கருணாகுழுவினரும் மேற்கொண்டு வரும் சிறார் படைச் சேர்ப்பில் தமது படையினரின் பங்களிப்புக் குறித்து வெளிப்படையான விசாரணைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று யுனிசெவ் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

இது தொடர்பில் யுனிசெவ் பேச்சாளர் கோடன் வைஸ் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் தற்போதும் சிறுவர்கள் கடத்தப்படுவது தொடர்கின்றது. எனவே சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அது தொடர்பான உறுதி மொழிகளை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு விடுதலைப்புலிகள் உறுதியளித்துள்ளனர்.

அவர்கள் இன்னும் சில நாட்களில் தங்களின் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர். நாம் சில தீர்மானங்களை முன்வைத்துள்ளதுடன் இறுதியான முடிபுக்கும் காத்திருக்கின்றோம். நாம் 18 வயதிற்கு கீழ்ப்பட்ட சிறார்களின் படைச் சேர்ப்பை எதிர்கின்றோம் என்றார் அவர்.

இது தொடர்பில் அரசின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளதாவது,

அரசு மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பான நடவடிக்கைகளுக்கு அரசு திட்டமிட்டுள்ளது. விடுதலைப்புலிகள் தமது பிடியை இழந்து வருவதால் அனைத்துலக சமூகத்தை தவறாக வழிநடத்த பல வழிகளை கையாண்டு வருகின்றனர்.

அவர்கள் சில பெண்களை அழ வைத்து தமது பிள்ளைகளை வெள்ளை வானில் வந்தவர்கள் கடத்திச் சென்று விட்டதாக வழமைபோல் கதைகளை கட்டுவதுடன் படையினரையும் குற்றஞ்சாட்டுவார்கள் என்றார்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரான சு.ப.தமிழ்ச்செல்வனை கடந்த வாரம் கிளிநொச்சி சென்றிருந்த யுனிசெவ் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

# புத்தரின் சிலை சீனாவுக்கு அன்பளிப்பு

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான சமய ரீதியிலான உறவை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பீஜிங்கில் உள்ள லிங்குவான் விகாரைக்கு புத்தரின் சிலை ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் நேற்று முற்பகல் பிரசித்தி பெற்ற இந்த பௌத்த விகாரைக்குச் சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இவ்விகாரையில் புத்த பகவானின் இடது பக்க புனித பல் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் நாடொன்றைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக புத்த தர்மத்தின் ஊடாக பெருமளவிலான பொறுப்புக்களை நிறைவேற்ற முடியும் என அங்கு உரையாற்றிய ஜனாதிபதி கூறியுள்ளார். சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு மிகவும் பழைமை வாய்ந்தது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வுகள் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு பீஜிங்கில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-3)

# கடத்தப்படலாம் அல்லது கொலை செய்யப்படலாம் என்பதனாலேயே நாட்டை விட்டு வெளியேறினோம்

## அவுஸ்திரேலியாவில் கைதான 83 இலங்கையர்களும் தெரிவிப்பு

படகொன்றின் மூலம் அவுஸ்திரேலிய எல்லைக்குள் பிரவேசிக்க முற்பட்டபோது அந் நாட்டு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர்களில் 83 பேரில் பெரும்பாலானோர் மாணவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பெரும்பாலானோர் உயர்தர மாணவர்களாகவும் வேறு சிலர் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களும் உள்ளடங்குவதாகவும் முதற்கட்ட விசாரணைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இலங்கையில் தாம் கொலை செய்யப்படலாம் அல்லது கடத்தப்படலாம் என்னும் உயிராபத்துக் காரணமாகவே தாம் நாட்டை விட்டு வெளியேறியதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் அனைவரும் தமிழ் பேசுபவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் சிலரும் இவர்களில் அடங்குகின்றனர்.

அவுஸ்திரேலிய கடல் எல்லைக்குள் வைத்து கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்ட இந்த 83 பேரையும் நாட்டுக்கு திருப்பி அனுப்ப பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தோனேசியாவில் இருந்து அவுஸ்திரேலியா நோக்கி சென்ற படகில் பயணித்த இவர்களை மீண்டும் இந்தோனேசியாவுக்கே திருப்பி அனுப்ப உயர் மட்டப்பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாக இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் ஓரிரு தினங்களில் இவர்கள் திருப்பி அனுப்பப்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார். அவுஸ்திரேலியாவின் ஆளுகைக்குட்பட்ட கிறிஸ்மஸ் தீவில் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு எக்காரணம் கொண்டும் அகதி அந்தஸ்து வழங்கப்படமாட்டாது என்றும் சட்டவிரோத குடியேற்றங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவுஸ்திரேலியப் பிரதமர் ஹவாட் தெரிவித்திருந்தார்.

ஆயினும் இலங்கையில் தற்போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் கருத்தில் கொண்டு இவர்களுக்கு அகதி அந்தஸ்து அளிக்குமாறு கோரி தற்போது பல அழுத்தங்களும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)



சீனா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அவரது ம... ரையும் அந் நாட்டு ஜனாதிபதி வரவேற்பதை படத்தில் காணலாம்.

## போர் நிறுத்த உடன்படிக்கை

# புலிகளின் நிர்வாகத்திற்கு சட்ட அந்தஸ்தை வழங்காது!

## ஐ.தே.கட்சி கருத்துத் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பட்டால் விடுதலைப்புலிகளால் நிர்வகிக்கப்படும் பகுதிக்கான அங்கீகாரம் ஏற்படப்போவதில்லை. அமைதிப் பேச்சுக்குரிய சூழலை உருவாக்கவே போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளதாவது;

எமது கட்சி ஒருபோதும் நாடு பிளவு படுவதற்கு ஆதரவு வழங்காது. அரசுடன் இரு தசாப்தங்களாக போர் புரிந்து வந்த விடுதலைப்புலிகளுடன் பேச்சுகளுக்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே போர் நிறுத்தம் உருவாக்கப்பட்டது.

போர் நிறுத்த உடன்பாட்டுக்கு முன்னர் கூட புலிகளால் ஒரு அங்கீகரிக்கப்படாத நாடாக வடக்கு மற்றும் கிழக்கு நிர்வகிக்கப்பட்டு வந்தது. அங்கு விடுதலைப்புலிகளின் நீதித்துறை, காவல்துறை மற்றும் நிர்வாகத்துறை ஆகியன இயங்கி வந்துள்ளன.

போர் நிறுத்தமானது தமது நிர்வாகத்திற்கு ஒரு சட்டபூர்வமான அந்தஸ்தைத் தரும் என்ற விடுதலைப்புலிகளின் விவாதத்தில் எந்த அர்த்தமும் இல்லை. எமது கட்சியின் நோக்கம் அதிருப்தியான குழுக்களை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதே என்றார் அவர்.

எனினும் போர் நிறுத்தத்தின் ஐந்தாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு விடுதலைப் புலிகளினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் போர் நிறுத்தம் அனைத்துலக சமூகத்தின் முழுமையான ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்டதாகவும் இலங்கை அரசியல் அமைப்பின் பெரும்பாலான சரத்துக்களில் அதற்கு அதிக அதிகாரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது தமிழீழ அரசிற்கான அங்கீகாரத்தின் ஆரம்பம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதே சமயம் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் போர் நிறுத்தத்தை இல்லாது செய்யும்படி அரசை வலியுறுத்தி வருவதுடன் அரசு வடக்கு கிழக்கு இணைப்பை இரத்துச் செய்தது போன்று போர் நிறுத்த உடன்பாட்டையும் இரத்துச் செய்ய வேண்டும் எனக் கோருகின்றனர்.

2004-2005 ஆம் ஆண்டுவரை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் 2005 தொடக்கம் இன்று வரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் போர் நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டிருப்பது இனப்பிரச்சினைக்கு பேச்சுக்களின் மூலம் தீர்வு காண்பதற்கே எனத் தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரச படையினர் தமது நாட்டின் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பையும் பேணுவதற்கான நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ள முடியும். இதன் மூலமே நிழல் அரசாங்கம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தேசமாக மாறுவதனை தடுக்க முடியும் என அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

### மகிந்தவை...

தனது தவறு என்றும் அதற்கான தண்டனையே தனக்கு கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நெருக்கமாக இருக்கின்றவர்களுக்கும் தனக்கு ஏற்பட்ட நிலை விரைவில் ஏற்படும். எனவே அவர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் மங்கள சமரவீர கேட்டுள்ளார்.

தனது அமைச்சுப் பதவியைப் பறித்துக் கொண்டதன் மூலம் தனது அரசியல் எதிர்காலத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாக சிலர் கருதுவதாகவும் ஆனால் அது தவறு என்பதை விரைவில் நிரூபிக்கப் போவதாகவும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

### யாழ்...

நேரங்களின் பின்னர் கல்லூரி அதிபருடன் பாடசாலை வளாகம் சோதனை செய்யப்பட்டது. இந் நடவடிக்கையால் இந் துக் கல்லூரி மாணவர்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

இத் தேடுதலின்போது கிளைமோர் குண்டு, கைக்குண்டு மற்றும் ரி56 ரகத் துப்பாக்கி என்பன கைப்பற்றப்பட்டதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ந-3)

### புலிகள்...

இந்த உடன்படிக்கை காரணமாகவே கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது முடிபுகளில் மாற்றங்கள் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ந-3)

### மட்டக்களப்பில்...

முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையில் சுமார் 15 வெளிநாட்டுத்தூதுவர்கள் அடங்கிய குழுவினர் நேற்றுக் காலை மட்டக்களப்பிற்கு சென்றிருந்தனர்.

இரண்டு ஹெலிகளில் சென்ற இவர்கள் காலை 8.40 மணியளவில் மட்டக்களப்பு நகரிலுள்ள விமானப்படைத்தளத்தில் தரையிறங்கினர். அச் சமயம் விடுதலைப்புலிகள் எறிகணைத் தாக்குதல் நடத்தினர்.

இதன்போது அமெரிக்கத்தூதுவரும் இத்தாலியத்தூதுவரும் காயமடைந்தனர். இவர்களுடன் படைத்தரப்பைச் சேர்ந்த 11 பேரும் மாணவி ஒருவரும் காயமடைந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

காயமடைந்த இத்தாலிய, அமெரிக்க தூதுவர்கள் உடனடியாக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இத் தாக்குதல் சம்பவத்தின்போது இரண்டு ஹெலிகொப்டர்களும் மயிரிழையில் தப்பிக்கொண்டதாகவும் கூறப்படுகின்றது. (ந-3,5)

### இராஜதந்திரிகள் மீதான...

எமக்கு தெரியப்படுத்தியதும் எமது தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப் பட்டன.

பாதுகாப்புநடவடிக்கைகளை புறக்கணித்து விட்டு இராஜதந்திரிகளை இராணுவ ஆட்லறி ஏவுதளத்திற்குள் அரசாங்கம் அழைத்து வந்தமை எமக்கு அதிர்ச்சியை அளிக்கிறது. இது பொதுவாக தாக்குதலை தூண்டும் நடவடிக்கையாகும்.

போர் நிகழும் பகுதிகளுக்கு வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளையும் அழைத்து வரும்போது விடுதலைப்புலிகளுக்கு முன்கூட்டியே அறிவிப்பது நடைமுறையில் உள்ள வழிமுறையாகும்.

இந்த எளிமையான நடவடிக்கை படையினரால் மட்டக்களப்பில் புறக்கணிக்கப்ப... ளது. அனைத்துலக சமூகம், வெ... தூதரகங்கள் என்பவற்றுடனான விடு... புலிகளின் உறவை குலைப்பதற்கு அ... கம் மேற்கொண்ட இந்த சதி நடவடிக்... நாம் மிகவும் வன்மையாக கண்டிக்கின்...

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச ப... ளால் ஒரு தலைப்பட்சமாக நடத்தப்ப... போரில் பாதுகாப்பு நடைமுறைகளை அ... படையினர் பின்பற்றாது விட்டது ஒரு ... மாகும். நேற்றுக் காலை படையினரால் ... கொள்ளப்பட்ட மோட்டார் மற்றும் ஆட்... தாக்குதல்களுக்கே விடுதலைப்புலிகள் ... தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றார் இ... திரையன். (ந...

## வவுனியாவில் துப்பாக்கிச்... இரண்டு பொலிஸார் ப...

(வவுனியா)

வவுனியாவில் முதலிக்குளம் பகு... அடையாளம் தெரியாத நபர்கள் நட... துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பொலிஸ் கா... டபிள்கள் பலியாகியுள்ளனர்.

இத் துப்பாக்கிச்சூடு நேற்று முன்... இரவு 7.40 மணியளவில் மோட்டார் ... ளில் சென்ற அடையாளம் தெரியாத ... ளால் நடத்தப்பட்டது. விடுதலைப்புலி... பிஸ்ரல் குழுவினரே துப்பாக்கிச்சூட்... நடத்தியதாக வவுனியாப் பொலிஸார் ... விக்கின்றனர்.

## மன்னாரில் கிளைமோ... பாடசாலை அதிபர் ...

(மன்னார்)

மன்னார் விளாத்திக்குளத்தில் இடம்பெ... கிளைமோர்த் தாக்குதலில் பாடசாலை ... பர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மடு விளாத்திக்குளத்தில் நேற்று முற்... 10.30 மணியளவில் இத்தாக்குதல் நடத்... பட்டுள்ளது. விளாத்திக்குளத்தில் உள்ள ... சாலையின் அதிபராக பொறுப்பு எடுப்ப... காக கோட்டக்கல்வி அதிகாரியுடன் செ... கொண்டிருந்த சிலுவைராசா அமலநே... (வயது 33) என்பவரே கொல்லப்பட்டவரா...

கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்ப... பாடசாலை அதிபரும் காயமடைந்த கோட்... கல்வி அதிகாரியும் மன்னார் விடத்தல் தீவை... சேர்ந்தவர்களாவர்.

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அ... யினரே இக் கிளைமோர்த் தாக்குதலை ... கொண்டதாக கூறப்படுகின்றது. (ந...

### இலங்கை...

அரசியல் அவதானிகள் கருதுகின்றன...

இதேவேளை வெளிவிவகார அமைச்... செயலாளர் பாலித ஹொகன்ன இலங்... யின் தற்போதைய நிலைவரம், நோர்வே... அனுசரணையில் மேற்கொள்ளப்பட்ட ... நிறுத்த உடன்படிக்கையின் நிலை மற்... அதிகரித்துள்ள மோதல்கள் குறித்து ... வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதி... களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார். (ந...

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது